<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 190/2022</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.18</u>

<u>Accused present</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. நாகராஜன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 21st day of January, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் சாத்தூர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.05.2022 ம் தேதி அன்று சாத்தூர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது வெம்பக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 178/2022 பிரிவு 174(3) குவிமுச ஆக சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வாதியின் அசல் புகாரினையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இறந்து போன காயத்ரி என்பவருக்கு திருமணம் ஆகி 3 ஆண்டுகள் ஆவதால் வழக்கினை எனது பார்வைக்கு வைத்தார். மேற்படி வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் இரவு 8.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயகரிசல்குளம் கிராம நிர்வாக அலுவலர் ராமராஜ், மற்றும் கிராம உதவியாளர் பாலாஜி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ

இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த **மாதிரி வரைபடம் அசாஆ 25** ஆகும்.

பின்னர் அன்றையதினம் இரவு 9.45 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்த எவர்சில்வர் சர்பத் டம்ளர் –2, குழந்தைக்கு பால் கொடுக்கும் பிளாஸ்டிக் பால் பாட்டில் –1, நோக்கியோ பட்டன் செல் –1, ரெட்மீ டச் செல் –1, குழந்தை மூச்சு அடக்கிட்டான் ஆகையால் நீங்கள் உயிர் வாழ விருப்பமில்லை என்று எழுதப்பட்ட டைரியில் இருந்து கிழிக்கப்பட்ட தாள் –1, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட டைரி –1 (முன்பக்க அட்டையில் Sun School என்று எழுதப்பட்டுள்ளது) ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அத்தாட்சியில் மேற்படி சாட்களிடம் கையொப்பம் பெற்றேன். **நோக்கியோ பட்டன் செல் –1, ரெட்மீ டச் செல் –1 ஆகியவை சா.பொ. 9 மற்றும் சா.பொ. 10** ஆகும்.

பின்னர் சாட்சிகள் வெள்ளைச்சாமி, முத்துகிருஷ்ணன், ராமராஜ், பாலாஜி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் சாத்தூர் குற்றவியல் நீதிமன்றம் எண் 2 க்கு அனுப்பிவைத்தேன்.

பின்னர் இறந்த காயத்ரி பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்ய அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 26.05.2022ம் தேதி பகல் 12.00 மணிக்கு விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த 6 மாத குழந்தை கோகுலரக் ஷன் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பகல் 12.00 மணியிலிருந்து 14.00 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 26** ஆகும். பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுத்தேன். வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் இறந்துபோன காயத்ரி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து பிரேத பரிசோதனை செய்த மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன்பின்னர் இரண்டு பிரேதங்களும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் சாட்சிகள் அஜித்குமார், வெள்ளைச்சாமி, முத்துகிருஷ்ணன், ரமேஷ், ராமசாமி என்ற ஜெயராஜ், திருமதி, நிறைகுடத்தான், முத்துராமலிங்கம் என்ற பசும்பொன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கு இறந்துபோன காயத்ரியின் பிரேதத்தில் இருந்த ரோஸ் கலர் கருப்பு பூ போட்ட நைட்டி –1, அரக்கு கலர் உள்பாவாடை –1, பிரேத பரிசோதனைக்கு சென்றுவந்த பெண்காவலர் திவ்யா என்பவர் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இறந்துபோன காயத்ரியின் **பிரேதத்தில் இருந்த ரோஸ் கலர் கருப்பு பூ போட்ட நைட்டி –1, அரக்கு கலர் உள்பாவாடை –1 ஆகியவை சா.பொ. 11 மற்றும் சா.பொ. 12** ஆகும்.

பின்னர் 27.05.2022ம் தேதி சாட்சிகள் துர்கேஷ்வரி, அழகேசன் என்ற வினோத் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் இறந்துபோன காயத்ரியின் பிரேதத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்வதற்காக இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பெண் காவலர் திவ்யா என்பவர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

அன்றைய தினம் குழந்தை கோகுலரக்ஷனின் பிரேதத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்வதற்காக இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு காவலர் ராஜசேகர் என்பவர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

அன்றைய தினம் இறந்து போன குழந்தை கோகுலரக்ஷனின் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கையில் இறப்பிற்கான காரணமாக Reserved pending – Chemical analysis என்று வழங்கப்பட்டிருந்தது.

விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி பேராசிரியருக்கு பிரேத பரிசோதனை அறிக்கை வாயிலாக எனக்கு எழுந்த சந்தேகங்களை 5 வினாக்களாக கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் அடிப்படையில் மருத்துவர் எனக்கு பதில் அளித்தார். அந்த பதில் ஏற்கனவே அசாஆ 18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பதிலறிக்கையில் இறப்பானது மூச்சு திணறல் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று கருத்துரை வழங்கியதன் காரணமாக இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும், மருத்துவர் சுதன் அவர்களை விசாரணை செய்ததிலிருந்தும் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை பிரிவு 174(3) குவிமுச என்பதிலிருந்து இதச பிரிவு 302 ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை சாத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண் – 2 க்கு அனுப்பிவைத்தேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 27** ஆகும்.

பின்னர் 01.06.2022ம் தேதி சாட்சி முத்துராமலிங்கம் என்ற பசும்பொன் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பெற்றேன். பின்னர் 03.06.2022ம் தேதி சாட்சி வெள்ளைச்சாமி என்பவரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையின் போது சாட்சி வெள்ளைச்சாமி இறந்துபோன காயத்ரி என்பவரின் தங்கை வைதேகி, வினோத் ஆகியோர்களின் திருமணத்தின்போது பராமரிக்கப்பட்ட மொய் நோட்டினை என்னிடம் சமர்ப்பித்தார். அதில் பக்க எண் 21 ல் வரிசை எண்கள் 1 முதல் 6 வரையிலான பதிவுகள் இறந்துபோன காயத்ரியின் கையொப்பம் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். அதனை படிவம் 91 வாயிலாக கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

பின்னர் பிஆர் எண் 135/2022 ல் அயிட்டம் எண் 5 ல் எழுதப்பட்ட கையொப்பம் மற்றும் அயிட்டம் 6ல் ஜனவரி 2019 TUESDAY என்று தாளில் எழுதப்பட்டிருந்த கையெழுத்து ஒன்று தானா என்பதையும், பிஆர் எண் 135/2022 ல் அயிட்டம் 5 ல் உள்ள கையொப்பமும், பிஆர் எண் 136/2022 ல் அயிட்டம் எண் 1 ஆன திருமண மொய் நோட்டில் பக்க எண் 21ல் 1 முதல் 6 வரிசையில் உள்ள பெயர் விபரங்கள் அடங்கிய கையொப்பமும் ஒன்றுதானா என்று அறியும் பொருட்டு மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்பீட்டிற்காக அனுப்பிவைப்பதற்கு நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதனடிப்படையில் தபால் மூலம் மேற்படி ஆவணங்கள் ஆய்விற்காக நீதிமன்றத்தின் மூலம் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு காவலர் 3896 சின்னசுப்பு என்பவர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

பின்னர் 07.06.2022ம் தேதி சாட்சிகள் திவ்யா, ராஜசேகர், சின்னசுப்பு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் 08.06.2022ம் தேதி காலை 9.00 மணிக்கு விஜயகரிசல்குளம் கிராம நிர்வாக அலுவலர் ராமராஜ், மற்றும் கிராம உதவியாளர் பாலாஜி ஆகிய இருவரும் அவர்களது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விஜயகரிசல்குளம் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த ராமசாமி என்ற ஜெயராஜ் என்பவரின் மகன் கொத்தாலமுத்து என்பவர் கிராம நிர்வாக அலுவலர் முன்பு சரணடைந்து குற்றத்தை ஒப்புக்கொண்டதாக வாக்குமூலம் அளித்ததின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் தனி அறிக்கையுடன் எதிரி கொத்தாலமுத்துவை வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜர் படுத்தினார்.

பின்னர் நான் மேற்படி எதிரியை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து விசாரிக்க எதிரி எவ்வித வற்புறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் தன்னை அழைத்து சென்றால் கோட்டைப்பட்டியில் உள்ள பாலத்தின் கீழ் மறைத்து வைத்திருக்கும் இரத்தக்கறை படிந்த கொலைக்கு பயன்படுத்திய துண்டையும், கோவில்பட்டி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வாகன நிறுத்தத்தில் நிறுத்தியிருக்கும் இருசக்கர வாகனத்தையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அதனடிப்படையில் எதிரிகளையும் சாட்சிகளையும் மேற்படி இடங்களுக்கு அழைத்து சென்று எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சான்று பொருட்களை அத்தாட்சியின் பேரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன்.

பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து உரிய படிவங்கள் தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தேன்.

பின்னர் சாட்சிகள் ராமராஜ், பாலாஜி, அன்னபாக்கியம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் 09.06.2022 ம் தேதி சாட்சிகள் வெள்ளைச்சாமி, அஜித்குமார், ராமசாமி, திருமதி. நிறைகுளத்தான், முத்துராமலிங்கம் என்ற பசும்பொன், முத்துகிருஷ்ணன், ரமேஷ், துர்கேஷ்வரி, அழகேஷ்வரன், ராமராஜ், பாலாஜி ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 10.06.2022 ம் தேதி பிஆர் 135/2022 அயிட்டம் 5 ல் எழுதப்பட்ட கையெழுத்தும், மற்றும் அயிட்டம் 6 டைரியில் ஜனவரி 2019 TUESDAY என்ற தாளில் எழுதப்பட்டிருந்து கையெழுத்தும் ஒன்றா என்பதையும், பிஆர் எண் 135/2022 அயிட்டம் 5 ல் உள்ள கையெழுத்தும், பிஆர் எண்.136/2022 அயிட்டம் எண் 1 ல் பக்க எண் 21 ல் 1 முதல் 6 வரையிலான பெயர் மற்றும் விபரங்கள் எழுதப்பட்ட கையெழுத்தும் ஒன்றா என்பதையும் ஆய்வு செய்வதற்காக கடந்த 07.06.2022 ம் தேதி நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதனடிப்படையில் மேற்படி ஆவணங்கள் மதுரை வட்டார

தடய அறிவியல் ஆய்வகத்தில் MDU/DOC–99/2022 என ஏற்பளிப்பு செய்யப்பட்டது. அதனடிப்படையில் ஆய்வகத்திலிருந்து கையெழுத்து நிபுணர் நீதிமன்றத்திற்கு வந்தார். நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் முன்பு எதிரி ஆஜர் படுத்தப்பட்டு எதிரியிடமிருந்து மாதிரி கையெழுத்து பெற்று அதனை ஆய்விற்கு எடுத்துச்சென்றார்.

பின்னர் 13.06.2022ம் தேதி பிஆர் எண் 154/2022 அயிட்டம் எண் 1ல் இரத்தக்கறை படிந்த வெள்ளைத்துண்டை குருதி வடிநீரியியல் அறிக்கை பெறுவதற்காக இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்விற்காக அனுப்பிவைத்தேன்.

பின்னர் 15.06.2022ம் தேதி மருத்துவர் கிஷன்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு அவரிடமிருந்து காயத்ரியின் உடலை விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பெற்று விபத்து பதிவேடு பதிவு செய்ததற்கான விபத்து பதிவேடு அறிக்கை பெற்றேன். மேற்படி விபத்து பதிவேடு அறிக்கை **அசாஆ 28** ஆகும். பின்னர் அன்றைய தினமே காவலர் திவ்யா என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 18.06.2022ம் தேதி இராமநாதபுரம் வட்டாரதடய அறிவியல் ஆய்வக அலுவலர் திருமதி. சுப்பாலட்சுமி என்பவரை விசாரித்து அறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன இரண்டு பேரின் உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன்.

பின்னர் 21.06.2022ம் தேதி மருத்துவர் சுதன் என்பவரையும் மருத்துவர் வெங்கடேஷ் பிரசன்னா என்பவரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து இறப்பிற்கான காரணம் குறித்து இறுதி கருத்துரை பெற்றேன்.

பின்னர் சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிஆர் எண் 135/2022ல் கண்ட நோக்கிய பட்டன் செல் –1, ரெட்மீ ஆன்ட்ராய்டு செல்போன் –1 ஆகியவற்றை சென்னையில் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைத்து நோக்கியா பட்டன் செல்லில்

பதிவான குறுஞ்செய்திகளையும், ரெட்மீ ஆன்ட்ராய்டு செல்போனில் உள்ள வாட்ஸ் அப் செய்திகளையும் எடுத்து தருமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

பின்னர் 23.06.2022ம் தேதி வைரமுத்து, உதவி இயக்குநர், தடய அறிவியல் ஆய்வகம், விருதுநகர் என்பவரை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 24.06.2022ம் தேதி காவலர் ராஜசேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 28.06.2022 ம் தேதி காவலர் கிரகலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் வெள்ளைச்சாமி, ராமசாமி, முத்துராமலிங்கம் என்ற பசும்பொன் ஆகியோர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி ரகசிய வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுத்தேன். சாத்தூர் நீதித்துறை நடுவர் 2 முன்பு ஆஜராகி சாட்சி வெள்ளைச்சாமி அளித்த ரகசிய வாக்குமூலம் **அசாஆ 29** ஆகும்.

பின்னர் 19.07.2022ம் தேதி அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் கல்யாண் குமார் என்பவரை விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையிலிருந்தும் எனது விசாரணையிலிருந்தும் வழக்கு சம்பந்தமாக மரணம் வரதட்சணையால் ஏற்பட்டதல்ல என்று தெரியவந்தது. எனவே வழக்கின் கோப்பினை நிலைய ஆய்வாளரான நம்பிராஜன் என்பவர் வசம் தொடர் புலன்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –

அசா 1 சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே போலிசார் அங்கு சென்றுவிட்டார்கள் என்றால் இருவரும் ஒன்றாகத்தான் சென்றார்கள். சம்பவ இடத்திற்கு போலிசார் செல்வதற்கு முன்பே அங்கு கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். எனது விசாரணையில் இறந்துபோனவரின் நகைகளை எதிரி

செலவழித்துவிட்டார் என்பது குறித்து வெம்பக்கோட்டை காவல் நிலையத்திலோ அல்லது சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலோ புகார் எதுவும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் கொடுக்கவில்லை.

சம்பவத்திற்கு முன்பு எதிரி இறந்துபோனவரை அடித்து விரட்டிவிட்டதாக புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கூறியது போன்று சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால் தான் இறந்துபோன நபர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது விசாரணையில் எதிரியையும் இறந்துபோன நபரையும் எதிரியின் தந்தை தனியாக ஒரு வீட்டினை ஒத்திக்கு பிடித்து தனிக்குடித்தனம் வைத்தார்கள் என்று தெரியவந்ததா என்றால் தெரியவந்தது. மேற்படி வீடு யாருக்கு சொந்தமானது என்று நான் விசாரித்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

கிராம நிர்வாக அலுவலர் ராமராஜ் எனது விசாரணையில் அவருக்கு தெரிந்த ஒரு நபர் போன் செய்து சொன்னதாக சொல்லப்படும் நபரை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். மேலும் அவர் எனது விசாரணையில் ஏழாயிரம்பண்ணை புது பஸ்ஸ்டான்டில் வைத்து டூவீலர் ஸ்டான்டிற்கு கூட்டிச்சென்று இருசக்கர வாகனத்தை கைப்பற்றியதாக சொல்லியள்ளார் என்றால் சரிதான்.

நான் தயார் செய்த பார்வை மகஜரில் கிராம நிர்வாக அலுவலருக்கான முத்திரை எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியிலும் கிராம நிர்வாக அலுவலருக்கான முத்திரை எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

கிராம நிர்வாக அலுவலர் ராமராஜ் என்பவரிடம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் எதிரி எந்த இடத்தில் வைத்து வாக்குமூலத்தை கொடுத்தார் என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் விஜயகரிசல்குளம் என்று சொல்லப்பட்டுள்ளது. விஜயகரிசல்குளத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் சுமார் 300 வீடுகள் இருக்கும். விஜயகரிசல்குளத்தில் எந்த

இடத்தில் வைத்து எதிரி வாக்குமூலம் கொடுத்தார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் வாக்குமூலத்தில் எதிரி தானாக முன்வந்தும், எந்தவித துன்புறுத்தலுமின்றி வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

மொய் நாட்டினை நான் அத்தாட்சி மூலம் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். விசாரணையின் போது ஆஜர்படுத்தப்பட்டதை நான் படிவம் 91 வாயிலாக கைப்பற்றினேன். எதிரியை வருவாய் கோட்டாட்சியரிடம் எந்த தேதியில் விசாரணைக்கு அழைத்து சென்றேன் என்றால் 28.06.2022 ம் தேதி ஆகும். அந்த சமயம் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்றால் சரிதான். எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நிலையில் அவரை வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு ஆஜர்படுத்த நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா என்றால் அனுமதி பெற்றேன். எந்த தேதியில் அனுமதி பெற்றேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் நீதிமன்றத்தில் அனுமதி பெற்றதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற காவலில் எவ்வித அனுமதியும் இல்லாமல் நான் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு எதிரியை அழைத்து சென்றேன் என்றாலும் அவ்வாறு அழைத்து சென்றது சட்டப்படி தவறு என்றாலும் சரியல்ல.

08.06.2022 ம் தேதி சான்று பொருட்களை கைப்பற்றியதாக தாக்கல் செய்துள்ள அத்தாட்சியில் வெள்ளை நிற துண்டு ஒன்றினை மட்டுமே கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

கோவில்பட்டி பேருந்து நிலையத்தில் உள்ள வாகன காப்பகத்தில் எதிரியின் இருசக்கர வாகனத்தை நான் கைப்பற்றியதாக தெரிவித்துள்ள நிலையில் மேற்படி வாகன காப்பகம் யாருக்கு சொந்தமானது என்று நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அந்த வாகன காப்பகம் சுரேஷ் என்பவருக்கு சொந்தமானது ஆகும். மேற்படி சுரேஷ் என்பவரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அங்கு பணி செய்த

அன்ன பாக்கியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாகன காப்பகத்தில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் இல்லை. வாகன காப்பகத்தில் சிசிடிவி கேமரா இருந்தது என்றாலும் அந்த சிசிடிவி பதிவுகள் வழக்கிற்கு விரோதமாக இருந்தது என்பதால் தற்போது வாகன காப்பகத்தில் சிசிடிவி கேமரா இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ. 4 டைரி யாருக்கு சொந்தமானது என்று எனது புலன்விசாரணையில் துலங்கியதா என்றால் வீட்டில் குடியிருப்பவர்களில் எதிரியின் கையெழுத்துடன் கூடியதாக இருந்தது. மேற்படி டைரியில் எதிரியின் பெயர் எதுவும் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் இடம்பெற்ற சாட்சிகளான தங்கவேல், மகாலிங்கம், மாரிச்சாமி, கஜேந்திரகுமார் ஆகியோர்களை இந்தவழக்கில் சாட்சிகளாக விசாரித்துள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை.

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அனைத்தும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டன என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவை வழக்கிற்காக என்னால் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

இறந்துபோன காயத்ரி என்பவர் அவரது மகனுக்கு பால் கொடுத்துக்கொண்டிருக்கும்போது இயற்கை மரணம் அடைந்துவிட்டார் என்றாலும் அதனால் தான் அவரது குழந்தையும் இறந்துபோன நபர் குழந்தையின் மீது விழுந்ததால் குழந்தையும் இறந்துவிட்டது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.